பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 07 செவ்வாய்க்கிழமை 23.08.2022 கதிர் 179

சர்வதேச எதிர்ப்புக்கு மத்தியில்

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நியாயப்படுத்துகின்றார் ரணில்



அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் தடுத்துவைத்து விசாரணை செய்யப் ☞2

# பாதுகாப்பு உள்ளிட்ட சலுகைகள் கோட்டாவுக்கு வழங்க வேண்டும்

## ரணிலிடம் மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

Human Rights Commission of Sri Lanka

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு உள்ளிட்ட வரப்பிரதாசங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. ☞2

## அரசியல் களத்தில் குதிப்பாரா கோட்டா?

### தெரியாது என்கிறது 'மொட்டு'




விரைவில் நாடு திரும்பும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, செயற்பாட்டு அரசியலுக்கு வருவாரா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார். ☞2

வசந்த முதலிகே கைது விவகாரத்தால்

## ஜெனிவாவில் இம்முறை சிக்குமா இலங்கை அரசு?







ஐ.நா. விசேட அறிக்கையாளர் வேண்டுகோள் விடுத்து 24 மணி நேரத்துக்குள் அதனைப் புறந்தள்ளி - தூக்கிக் கடாசிவிட்டு, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தில் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க ☞2

## அமைச்சுப் பதவி விடயம்: 'மொட்டு'க்காரர் விடாப்பிடி



புதிய அமைச்சரவை நியமனத்தின்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு உரிய இடம் அவசியமாகும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் வலியுறுத்தினார். ☞2

## விஞ்ஞானபீட மாணவர்கள் இருவருக்கு வகுப்புத் தடை

### யாழில் பகிடிவதையால் வந்த வினை

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்குப் பகிடிவதைக் குற்றச்சாட்டுக் காரணமாக மறு அறிவித்தல் வரையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவன் ஒருவரைப் பல்கலைக்கழக வாயிலில் வைத்துக் கடந்த 2 ஆம் திகதி இவர்கள் ☞2

## இப்போதைக்கு தேர்தல் இல்லை

### ஜனாதிபதி திட்டவட்டம்

இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தலை நடத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

## காங்கேசன்துறை கடற்படை முகாமில் சிப்பாய் தற்கொலை

யாழ்., காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற் படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் ☞2

## வல்வெட்டித்துறை நகர சபையை மீண்டும் இழந்த கூட்டமைப்பினர்



### தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இரா. சுரேன் புதிய தலைவராகத் தெரிவு

யாழ்., வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தலைவராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் இராமச்சந்திரன் சுரேன் தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவு இன்று நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அதன்போது தமிழர் விடுதலைக் கூட்டணி ☞2

தங்க நகை, கைப்பேசி கொள்ளை:

## பொலிஸார் 4 பேர் கைது

கொட்டாவ - வித்தியால சந்தியில் இளைஞர் ஒருவரின் தங்க நகை மற்றும் கைத்தொலைபேசி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் மாலபே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொட்டாவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞2

## அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் இன்று முதல் சில அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையைக் குறைத்துள்ளது என அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் பொன்னி சம்பா அரிசி ஒரு கிலோ 21 ரூபா குறைக்கப்பட்டு 194 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோ பருப்பு 25 ரூபா குறைக்கப்பட்டு 460 ரூபாவுக்கும், ஒரு கிலோ நெத்தலி 25 ரூபா குறைக்கப்பட்டு 1375 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 40 ரூபா குறைக்கப்பட்டு 180 ரூபாவுக்கும், ☞2

## தந்தையால் மகன் அடித்துக் கொலை

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறி தந்தையால் மகன் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் காலி - பிட்டிகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

40 வயதுடைய மகனே உயிரிழந்துள்ளார். 62 வயதுடைய தந்தையே அவரைக் கொலை செய்துள்ளார்.

காணி விவகாரம் ☞2

## அரசியல் களத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷநாடுதிரும்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறும், அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

நாடு திரும்பும் முன்னாள் ஜனாதிபதி செயற்பாட்டு அரசியலுக்கு வருவாரா என்பது குறித்து என்னால் அறிவிக்க முடியாது. அது தொடர்பில் முடிவெடுக்கும் சுதந்திரம் அவருக்கே உள்ளது. அவர் மீண்டும் செயற்பாட்டு அரசியலுக்கு வர வேண்டும் என்பதே எனது விருப்பம் - என்றார்.

## பயங்கரவாதத் தடைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப்படுத்தியமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியாயப்படுத்தியுள்ளார்.

போராட்டங்களின்போது பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியே விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகேயின் கைதுடன் அரசைத் தொடர்புபடுத்த வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகேவைத் தடுத்து வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திடக் கூடாது என்று மனித உரிமை பாதுகாவலர்கள் தொடர்பிலான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் தெரிவித்திருந்தார். இந்தநிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பழிவாங்கும் நோக்கில் கைது செய்யப்படவில்லை. அவர் மீது ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் உள்ளன. அவரைக் கைதுசெய்யும் உத்தரவை நீதிமன்றத்திடம் ஏற்கனவே பொலிஸார் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் முறையற்ற விதத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற அவர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். நாட்டில் அண்மையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கு இடையில் தோற்றம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளுடன் அவர்களுக்குத் தொடர்பு உண்டா என்ற ரீதியிலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரின் கைதுக்கும் அரசுக்கும் இடையில் எவரும் முடிச்சுப் போட வேண்டாம். அவர்கள் மூவரினதும் விவகாரம் தொடர்பில் நீதித்துறையே இறுதி முடிவு எடுக்கும். பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்யும்போது பயங்கரவாதத் தடைச் சட்டமும் பயன்படுத்தப்படும். இது புதிய விடயம் அல்ல - என்றார்.

## பாதுகாப்பு உள்ளிட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் கிடைக்காமையால், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாடு திரும்ப முடியாதுள்ளது என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எந்தவொரு பிரஜைக்கும் தமது நாட்டுக்கு வருவதற்கான உரிமை இருக்க வேண்டும்.

எனவே, முன்னாள் ஜனாதிபதிக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய வரப்பிரதாசம் உள்ளிட்ட சலுகைகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அவரின் குடும்பத்தாரும் நாட்டுக்கு வருவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் - என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமைச்சுப் பதவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு உரித்தான அமைச்சுப் பதவிகள் உரிய வகையில் கிடைக்கப்பெற வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அதிகளவு உறுப்பினர்களைக்கொண்ட அதாவது பெரும்பான்மைப் பலம்கொண்ட ஒரே கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. எனவே, இது குறித்து ஜனாதிபதி உரிய கவனம் செலுத்துவார் என்று நம்புகின்றேன் - என்றார்.

## ஜெனிவாவில் இம்முறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்திட்டுள்ளார். இது சர்வதேச சமூகத்தின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. உடனடியாகவே இந்த நடவடிக்கைக்கு சர்வதேச சமூகமும் அதிருப்தியை எதிர்வினையாற்றியுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, செயற்பாட்டாளர் ஹந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் வண. கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை மாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 19 பேரில் குறித்த மூவரும் அடங்குவர்.

சந்தேகநபர்களில் 15 பேர் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சந்தேகநபர் ஒருவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும், வண. கல்வெவ சிறிதம்ம தேரர், ஹந்த ஜீவந்த குணதிலக மற்றும் வசந்த முதலிகே ஆகியோர் பிணையில் விடுவிக்கப்படவில்லை. மாறாக 72 மணி நேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்பு காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு கையெழுத்திடுவது இலங்கைக்கு இருண்ட காலமாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அப்படியிருந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டமை சர்வதேச சமூகத்தை கொதிப்படையச் செய்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் உடனடியாகவே கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையில் ஜனநாயகத்தை சிதைப்பதாக உள்ளது. மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையை உறுதிப்படுத்துமாறு அரசிடம் கோருகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் ஜனாதிபதியினதும் அரசினதும் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ளன.

அரசின் இத்தகைய செயற்பாடுகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடரில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## விஞ்ஞானபீட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த இருவருக்கும் மறு அறிவித்தல் வரையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கும், விடுதிக்குள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## இப்போதைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரணியில் உள்ள ஒரு சில கட்சிகள் கூறுவது போல் தேசிய ரீதியில் தேர்தல் ஒன்றை இப்போதைக்கு நடத்த முடியாது. இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலையாவது நடத்தும்படி சில கட்சிகள் பரிந்துரைத்துள்ளன. அது தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

மக்களின் வயிற்றுப் பிரச்சினைக்கு முதலில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும். அதன்பின்னரே ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தற்போதைய அரசிடம் உண்டு. நானும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன்தான் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். இந்நிலையில், தேர்தலை வைத்துப் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை.

எந்தவொரு தேர்தலையும் மக்கள் இப்போது விரும்பவில்லை. எதிரணியிலுள்ள ஒரு சில கட்சிகள்தான் தேர்தலை விரும்புகின்றன.

முதலில் பொருளாதார நெருக்கடிக்கு ஒன்றிணைந்து தீர்வு காண முன்வருமாறு தேர்தலை விரும்பும் கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## வல்வெட்டித்துறை நகர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் இராமச்சந்திரன் சுரேனுக்கு ஆதரவாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர், சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த நால்வர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர் என 8 பேர் வாக்களித்தனர்.

இவருடன் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறுப்பினர் க.சதீஷுக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 6 பேரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவருமாக 8 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்குச் சமூகமளிக்கவில்லை.

அந்நிலையில், நகர சபைக்கான தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட இருவரும் தலா 8 வாக்குகளைப் பெற்று சம நிலையாக இருந்தமையால் குலுக்கல் முறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இரா. சுரேன் புதிய தலைவராகத் தெரிவாகினார்.

## தந்தையால் மகன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் பல நாட்களாக ஏற்பட்டு வந்த வாக்குவாதமே இந்தக் கொலைக்கான காரணம் என்று பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அத்தியாவசியப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகிலோ உருளைக்கிழங்கு (இறக்குமதி) 40 ரூபா குறைக்கப்பட்டு 280 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ நாட்டரிசி 2 ரூபா குறைக்கப்பட்டு 198 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

சிவப்பு சீனியும் 2 ரூபா குறைக்கப்பட்டு 310 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

## காங்கேசன்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கேகாலையை சேர்ந்த டி.பி.என்.டி. பெரேரா (வயது 23) எனும் கடற்படைச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிப்பாய் இன்று காலை தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தனது உயிரை மாய்த்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொலிஸார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களில் சார்ஜன்ட் ஒருவரும் மூன்று கான்ஸ்டபிள்களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்று கான்ஸ்டபிள்களில் ஒருவர் மாலபே பொலிஸ் நிலையத்துக்குப் புதிதாக வருகை தந்தவராவார்.

கொள்ளைச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோ, கொள்ளையிடப்பட்ட தங்க நகை மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி கொட்டாவ வித்தியால சந்தியில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்த மேற்படி இளைஞரை, வழி கேட்கும் போர்வையில் அழைத்து தங்கச் சங்கிலி உள்ளிட்ட பொருள்களைச் சந்தேகநபர்கள் கொள்ளையிட்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


# இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இருள் சூழ்ந்தது

தன்னுடைய அரசியல் சுய நோக்கங்களுக்காக – சுய லாபங்களுக்காக – தன் பங்காளிகளான மொட்டுக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக – பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தை, ஜனநாயக உரிமைப் போராட்டக்காரர்களுக்கு எதிராக ஏவி விட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'அரசியல் சின்னத்தனம்', பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் நாட்டுக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்றது என்பது திண்ணம்.

பொருளாதார இக்கட்டில் இருந்து மீளுவதற்கு சர்வதேச நாடுகளின் உதவி மிக மிக அவசியம். மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ரணிலின் அரசுத் தலைமைத்துவம் காட்டி வரும் பொறுப்பற்ற எதேச்சாதிகார அணுகுமுறை உதவும் நாடுகளைப் பின்னடிக்க வைத்துள்ளது என்பதும் உண்மை.

தன்னுடைய அரசியல் சுய லாபங்களை ஈட்டுவதற்காக நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மோசமாக்கி, நாட்டை மேலும் இக்கட்டில் சிக்க வைத்திருக்கிறார் ஜனாதிபதி.

உலக நாடுகள் – குறிப்பாக மேற்கு உலகம் – ரணில் அரசுக்கு எதிராகக் கொம்புவது வெளிப்படையானது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுவது போல அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வில் இலங்கைக்குக் காத்திருக்கிறது பெரும் நெருக்கடி என்பதும் கூட உண்மைதான்.

பல மேற்கு தரப்புகள் வெளியிடும் கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது மனித உரிமைகளுக்கு முரணானது என பிரிட்டனின் சார்பில் இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் அறிவித்துள்ளது. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையில் ஜனநாயகத்தைச் சிதைப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். மக்களின் கருத்து வெளிப்பாட்டு உரிமையை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவும் கவலை தெரிவித்துள்ளது.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து கவலை வெளியிட்ட ஐ.நாவின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர், அவர்களைத் தடுத்து வைக்கும் உத்தரவுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திடும் தினம் இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும் எனவும் எச்சரித்திருந்தார்.

அந்த இருண்ட தினம் வந்து விட்டது என்பதுதான் நாட்டின் துரதிர்ஷ்டம்.

## கோட்டா மற்றும் குடும்பத்தினர் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு அரசு அனுமதிக்கவேண்டும்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கோட்டாபய ராஜபக்ஷ, சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் சில சலுகைகள் மற்றும் நன்மைகளுக்கு உரித்துடையவர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடு திரும்புவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோரிக்கையை முன்வைக்கும் போதெல்லாம் அச்சுறுத்தல் நிலைமையை மதிப்பிடுவதற்கும், பாதுகாப்பை வழங்குவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போது தாய்லாந்தில் தஞ்சமடைந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் குடும்பம் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு போதிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

நாடு திரும்புவதற்கான அடிப்படை உரிமைகளை மீறும் அச்சுறுத்தல் சூழ்நிலையை அதிகாரிகள் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் சட்டக் கட்டமைப்பிற்குள் அத்தகைய மீறல்களைத் தடுப்பதற்கும் அல்லது நிவர்த்தி செய்வதற்கும் நியாயமான மற்றும் பொருத்தமான அனைத்து வழிகளையும் மேற்கொள்ளவும் பரிந்துரைத்துள்ளது.

## சீனி, அரிசி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட சில பொருள்களின் விலைகள் குறைப்பு!

லங்கா சதொச ஊடாக சில அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லங்கா சதொச நிறுவனத்தின் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று(செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் சீனி, அரிசி, பெரிய வெங்காயம், காய்ந்த மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் வெள்ளைப்பூடு ஆகிய பொருள்களின் விலை குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பெரிய வெங்காயம் 40 ரூபாவாலும் பொன்னி சம்பா 31 ரூபாவாலும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 40 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

## மண்ணெண்ணெயின் விலைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

### செந்தில் தொண்டமான் வலியுறுத்து



மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் தோட்டப்புற மக்களும் மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தோட்டப்புற மக்கள், மீனவர்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்கள் விலை அதிகரிப்பு காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு உடனடியாக விலை அதிகரிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம்!

### அமைச்சர் பந்துல தகவல்



நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் அரசமைப்புச் சபைகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மூடாவிட்டாலோ அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்காது விட்டாலோ நாட்டை தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும் கூறியுள்ளார்.

அமைச்சரவைதீர்மானத்தை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மசகு எண்ணெயை ஏற்றிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் காலங்களில் நாட்டை வந்தடையும்!

ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெயை ஏற்றிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் காலங்களில் நாட்டை வந்தடையவுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை இன்னும் 40 நாள்களுக்கு முழு கொள்ளளவுடன் இயங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெ. – தென்கொரியா கூட்டுப் போர்ப்பயிற்சி வடகொரியாவுக்கு எதிராக நேற்றுத் தொடக்கம்

சியோல், ஓக.23

வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியாவில் அமெரிக்க–தென்கொரியப்படைகள்கூட்டுப்போர்ப்பயிற்சியை நேற்றுத் தொடங்கியுள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் தீர்மானங்களை மீறியும், சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வடகொரியா அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளைச்சோதித்து வருகிறது. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. அதுமட்டும் இன்றி இந்த விவகாரத்தில் வடகொரியாமீது அமெரிக்காகடுமையானபொருளாதார தடைகளை விதித்துள்ளது. அதே சமயம் இந்தப் பிரச்சினைக்குபேச்சுமூலம்தீர்வுகண்டுவடகொரியாவை அணு ஆயுதமற்ற நாடாக மாற்ற அமெரிக்கா மற்றும் தென்கொரியா முயற்சித்து வருகின்றன.

ஆனால் தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை முழுமையாகப் திரும்பப்பெறும் வரை அணுஆயுதங்களைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என வடகொரியா கூறுகிறது. அதுமட்டும் இன்றி பொருளாதார தடைகளை திரும்பப் பெறுவதற்கு அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக வடகொரியா அவ்வப்போது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைச் சோதித்து அதிரவைத்து வருகிறது.

அந்த வகையில் வடகொரியா இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏவுகணை சோதனையை அதிகரித்தது. அதன்படி கடந்த 8 மாதங்களில் ஐ.நாவால் தடை செய்யப்பட்ட நீண்ட தூரம் செல்லும் ஏவுகணை உள்பட்ட முப்பதுக்கும் மேற் பட்ட ஏவுகணைகளை வடகொரியா சோதித்துள்ளது. இதனால் கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது.






இந்த நிலையில் வடகொரியாவின் அச்சுறுத்தல்களைச்சமாளிக்கதயாராகும் விதமாக தென்கொரியாவில் அமெரிக்க மற்றும் தென்கொரியப் படைகள் மிகப்பெரிய கூட்டுப் போர்ப்பயிற்சியை நேற்று தொடங்கின. இருநாடுகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள், போர்விமானங்கள், போர்க் கப்பல்கள் மற்றும் பீரங்கிகள் மூலம் வான், கடல், தரை என 3 வழிகளிலும் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போர்ப்பயிற்சி அடுத்த மாதம் (செப்டம்பர்) முதலாம் திகதி வரைத் தொடரும் என்று அமெரிக்கா மற்றும்தென்கொரியா அறிவித்துள்ளன. வடகொரியாவுடன் தூதரக ரீதியிலான பேச்சுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், கொரோனாப் பரவல் காரணமாகவும் அமெரிக்கா மற்றும் தென்கொரியா சமீப ஆண்டுகளாக இதுபோன்ற வருடாந்திர கூட்டுப் போர்ப் பயிற்சிகளை ரத்து செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா மற்றும் தென்கொரியா தங்களது கூட்டுப் போர் பயிற்சிகளை தற்காப்பு நடவடிக்கை எனக் கூறி வரும் நிலையில், அதை மறுக்கும் வடகொரியா அவை தங்கள் நாட்டின் மீது படையெடுப்பதற்கான ஒத்திகைகள் எனக் குற்றம் சாட்டுகிறது. இதனால் அமெரிக்க – தென்கொரியப் படைகளின் கூட்டுப் போர்ப்பயிற்சியை வடகொரியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இந்தச் சூழலில் கொரிய தீபகற்பத்தில் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

## குத்தாட்டம் போட்ட பின்லாந்தின் இளம் பெண் பிரதமர் போதைப்பொருள் பயன்படுத்தவில்லை எனக் கண்டறிவு





*பின்லாந்துபிரதமருக்குநடத்தப்பட்ட போதை மருந்து சோதனையில் முடிவுகள் வெளியாகி யுள்ளன. பரிசோதனையில் அவர் தடை செய்யப் பட்ட போதைப் பொருள் எதனையும் உட்கொள்ளவில்லை என்பது தெரியவந்தது. பின்லாந்து . பின்லாந்து நாட்டில் ஆளும் சமூக ஜனநாயகக் கட்சியின் பிரதமராக 36 வயது பெண்ணான சன்னா மரின் பதவி வகித்து வருகிறார்.*

*கடந்த 2019 ஆம் ஆண்டு தனது 34 வயதில் பின்லாந்தின் பிரதமராக பதவியேற்றதன் மூலம் உலகின் இளம் வயதுப் பிரதமர் என்கிற பெருமையை பெற்றவர் இவர்.*

*இந்த நிலையில் சன்னா மரின் தொடர்பான வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலானதை தொடர்ந்து அவரது பிரதமர் பதவிக்கு நெருக்கடி ஏற்பட்டது. சன்னா மரின் தனது வீட்டில் நண்பர்களுடன் சேர்ந்து உற்சாகமாக பாடி, குத்தாட்டம் போடும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி பெரும் சர்ச்சையை கிளப்பியது. வீடியோவைப் பார்த்த பலரும் சன்னா மரின் போதைப் பொருளை உட்கொண்டு நண்பர்களுடன் குத்தாட்டம் போட் டார் எனக் குற்றம் சாட்டி கடுமையாக விமர்சனம் செய்தனர்.*

*குடிமக்களுக்கு எடுத்துக்காட் டாக இருக்க வேண்டிய நாட்டின் பிரதமரே இவ்வாறு நடந்து கொள்வதா என எதிர்க்கட்சிகள் சாடின.*

*அதுமட்டுமின்றி சன்னா மரின் போதைப் பொருளைப் பயன்படுத்தினரா என்பதைப் பரிசோதிக்க வேண்டும் எனவும், பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட அவர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.*

*இந்த சர்ச்சையால் சன்னா மரினின் பிரதமர் பதவிக்கும், ஆளும் சமூக ஜனநாயக அரசுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனினும் விமர்சனங்களுக்கு பதிலளித்து பிரதமர் சன்னா மரின் தான்எந்த போதைப்பொருளையும் பயன்படுத்தவில்லை என்றும் சட்டத்துக்கு புறம்பாக எதையும் செய்யவில்லை என்றும் விளக்கமளித்துள்ளார்.*

*அவர் பேசுகையில், போதைப் பொருள் தொடர்பாக பரிசோதனை நடத்துவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதேபோல் எனது நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இப்போது இருப்பது போலவே இருக்க விரும்புகிறேன். அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகி றேன் என்றார். மேலும், என் வாழ்நாளில், என் இளமை பருவத்தில்யில்கூட,நான்போதைப்பொருள் பயன்படுத்தியதில்லை என்று கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து போதை மருந்து சோதனைக்கு அவர் தாமாக முன்வந்தார். அவருக்கு ஓகஸ்ட் 19இல் போதை மருந்து சோதனை நடத்தப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் சானா மேரினின் அரசியல் எதிர்காலம் அமையும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்து இருந்தனர்.*

*சன்னா மரினுடைய சிறுநீர் மாதிரி சேகரிக் கப்பட்டு, கோகோயின், ஆம்பெடமைன், கஞ்சா மற்றும் ஓபியாய்டுகள் போன்ற பல்வேறு போதைப் பொருள்களின் இருப்பு உடலில் உள்ளதா என பரிசோதிக்கப்பட்டது. இந்த நிலை யில், சோதனை முடிவுகள் நேற்று வெளியிடப் பட்டன.*

*அவருக்கு நடத்தப்பட்ட போதை மருந்து சோத னையில் எதிர்மறையான முடிவுகிடைத்துள்ளது. பரிசோதனையில் அவர் போதை மருந்து உட்கொள்ளவில்லை என்பது தெரிய வந்தது. முன்னதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா தொற்று விதிமுறைகளை மீறி சன்னா மரின் இரவு நேர கேளிக்கை விடுதிக்கு சென்று பொழுதை கழித்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியதும், இதற்காக அவர் மன்னிப்பு கோரியமையும் குறிப்பிடத்தக்கவை. இதன் மூலம் பின்லாந்து பிரதமர் பதவி அப்போதும் தப்பியது.*

## உக்ரைனில் அணு உலை அருகில் ரஷ்யா மீண்டும் நேற்றுத் தாக்குதல்

உக்ரைனில்அணுஉலைக்கு அருகில் ரஷ்யா மீண்டும் தாக்குதல் நடத்தியிருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போரை தொடங்கி நாளையுடன் (புதன்கிழமையுடன்) 6 மாதங்கள் ஆகிறது. ஆனால் போர் முடிவுக்கு வருவதற்கான எந்த அறிகுறிகளும் தென்படவில்லை. மாறாக போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

போரின் சமீபத்திய பிரச்சினையாக உக்ரைனில் உள்ள –ஐரோப்பியாவின் மிகப்பெரிய – அணு ஆலையான ஜபோரிஜியா அணுஉலை மாறியிருக்கிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு ஜபோரிஜியா அணு உலைக்கு அருகில் ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இது மிகப்பெரிய பேரழிவு தரும் அணு விபத்தை ஏற்படுத்தும் என உலக நாடுகள் கவலை தெரிவித்தன. குறிப்பாக ஐ.நா.வும், அமெரிக்கா உள்ளிட்ட ஒரு சில நாடுகளும் ஜபோரிஜியா அணுஉலைக்கு அருகே தாக்குதல்க ளில் ஈடுபட கூடாது என உக்ரைன் மற்றும் ரஷ்யாவை வலியுறுத்தின.

இந்த நிலையில் ஜபோரிஜியா அணுஉலைக்கு அருகில் ரஷ்யா நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஜபோரிஜியா அணுஉலையில் இருந்து 10 கிலோ மீற்றர்தொலைவில் உள்ள நிகோபோல் என்ற இடத்தில் ரஷ்யா தொடர்ச்சியாக பீரங்கி குண்டுகளை வீசித் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் இது குறித்து ரஷ்யா தரப்பில் உடனடியாக விளக்கம் அளிக்கப்படவில்லை.

## நான்கு மாத காரிருளின் பின்னர் அண்டார்டிகாவில் சூரியோதயம்



அண்டார்டிகாவில் நான்கு மாதங்களாக சூழ்ந்திருந்த இருள் விலகி சூரியன் உதித்த அரிய படம் வெளிவந்துள்ளது. அண்டார்டிகாவில் இந்த ஆண்டின் மே மாதத்தில் நீண்ட இரவு தொடங்கியது. இதனால், சூரியன் மறைந்து இருள் சூழ்ந்தது. நான்கு மாதத்திற்கு பின்னர் இருள் மறைந்து, சூரியன் உதிக்க தொடங்கி இருக்கிறது. இதனை ஐரோப்பிய விண்வெளிக் கழகம் அறிவித்து உள்ளது. இதனைத் தொடர்ந்து, அண்டார்டிகாவில் கன்கார்டியா ஆய்வு நிலையத்தில், ஆராய்ச்சி பணியில் ஈடுபட்ட 12 நபர்கள் கொண்ட குழு, சூரிய வெளிச்சத்தில் கண் விழித்துள்ளனர். குளிர்காலத்திலும் ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வந்தது. எனினும், சூரியன் உதித்த நிலையில், புதிய ஆராய்ச்சியாளர்கள் கொண்ட குழுவானது, இனி ஆய்வுப் பணியை தொடரும். மருத்துவர் ஹேன்னஸ் ஹேக்சன் படம் பிடித்த, சூரியன் உதித்த படம் ஒன்றை ஐரோப்பிய விண்வெளி கழகம் வெளியிட்டு உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அம்பாறை கரையோரக் கடலரிப்பு தடுப்பு நடவடிக்கைக்கு முயற்சி







(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டக் கரையோர பிரதேசங்களில் அண்மைய நாள்களாக ஏற்பட்டுள்ள தீவிர கடலரிப்பை கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையை முன்னிறுத்தி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் பைசால் காசிம் ஆகியோர் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் அம் பாறை மாவட்ட ஒலு வில், பாலமுனை, நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை பிரதேச மக்கள் குறித்த கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட விதங்கள் தொடர்பில் விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன் மூலம் மக்களின் சொத்துக்கள் கடலலையில் காவு கொள்ளப்பட்டுள் ளம்நியையும், இதனால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ள விடயங்களையும் ஜனாதிபதி செயலாளருக்கு எடுத்துரைத்தனர். மேலும் இந்த அனர்த்தத்தின் அவசர நிலை கருதி அவசரமாக முன்னெடுக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி செயலாளருடன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் பைசால் காசிம் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இது தொடர்பில் எடுத்துரைத்து அவசர நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் தொடர்பில் வலியுறுத்தவுள்ளனர் எனவும், அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## திருகோணமலையில் நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன

(வி.ரி. சகாதேவராஜா)

திருகோணமலை மாவட்டத்திற்கான பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளும் நேர்முக பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் திருமலையில் நடைபெற இருந்தன.

இரண்டு நாள்களுக்குமான நேர்முகப்பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றுமேலும் அவர் தெரிவித்தார்.



## பச்சை நிறமாகியுள்ள மட்டக்களப்பு வாவி!





மட்டக்களப்பு வாவியின் பெரும்பாலான நீர்ப்பரப்பு 'பூங்கறை' எனும் ஒருவித பச்சைப் படையால் சூழப்பட்டுள்ளதால் வாவி மாசடைந்து கொண்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சில இடங்களில் துர்நாற்றமும் வீசுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாவியில் வலைவீசி மீன் பிடிக்க முடியாமலுள்ளதாகவும் இந்தப் பூங்கறை'யில் ஒரு வித பசைத் தன்மை உள்ளதால் அதில் வலைகள் ஒட்டிக்கொள்வதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

வருடாவருடம் இத்தகைய 'பூங்கறை' எனும் பச்சை படர்தல் வாவியின் மேற்பரப்பில் சில நாள்களுக்கு நீடித்துப் பின்னர் இயற்கையாகவே மறைந்துவிடுவதாகவும், ஆனால் இந்த வருடம் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இந்தப் 'பூங்கறை'ப் பச்சைப் படலம் வாவியின் மேல் படரத் தொடங்கி இன்னமும் அது மறையவில்லை என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்ந்து நீடிக்குமானால் இயற்கைக்கும் நீர் வாழ் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் அவர்கள் அச்சப்படுகின்றனர்.

இது தொடர்பாக கிழக்குப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியரும் நீர் வாழ் உயிரின ஆய்வாளருமான கலாநிதி பெரியதம்பிவினோபபாவிடம் கேட்டபோது-

இது இயல்பாகவே நடக்கும் நிகழ்வு என்றாலும் பயிர்ச் செய்கைக்கு இடப்படும் இரசாயன உரக்கலவைகளில் பொதிந்துள்ள நைற்ரோஜன் பொஸ்பேற் நீர் நிலைகளை அடையும்போது இத்தகைய பச்சைப் படலம் உருவாகிறது.

இம்முறை முதல் அரையாண்டில் குறிப்பாக மார்ச் மாதமளவில் பெய்ய வேண்டிய மழை கிடைக்காததால் இந்தப் 'பூங்கறை' அப்படியே வாவியில் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. அத்தோடு வாவி நீர் கடலில் கலக்க முடியாத வண்ணம் முகத்துவாரம் எனும் கடல் - வாவி முகவாய் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த பச்சைப் படலம் வாவியின் மேற்பரப்பில் பல இடங்களில் பரவியுள்ளது.

தற்போதைக்கு இது நீர்வாழ் உயிரினங்களுக்கும் அதனை உண்ணும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பாதிப்புக்களைத் தரவில்லை என்றாலும், எதிர்காலத்தில் பாதிப்புக்கள் வராது என்று சொல்வதற்கில்லை.

விவசாயிகள் தேவைக்கு அதிகமாக இரசாயன உரத்தைப் பாவித்து அவை பயிர்களால் உறிஞ்சப்பட்டது போக மீதமானவை வாவியில் கலக்கின்றன. அதனாலும் வாவியில் கொட்டப்படும் கழிவுகளாலும் இத்தகைய சூழல் மாசடைதல் ஏற்படுகிறது. - என்றார்.



## சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரியில் ஏழு மாணவிகளுக்கு மௌலவியா பட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இம்முறை 07 மாணவிகள், மௌலவியா பட்டம் பெற்று வெளியேறுகின்றனர் என கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இக்கல்லூரியில் ஐந்து வருடகால அல்-ஆலிம் எனும் இஸ்லாமிய மார்க்க கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்து, இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள ஐந்தாவது தொகுதி மாணவிகளான இவர்களுக்குரிய பட்டமளிப்பு விழா விரைவில் இடம்பெறவுள்ளது.

ஏ.டபிள்யூ.எப்.அப்னா ஹனூன் (சாய்ந்தமருது), ஏ.ஜி.எப்.ஸஹ்ரா (சாய்ந்தமருது), ஏ.ஆர்.எப்.சனோபர் ஹஸீன் (சாய்ந்தமருது), ஜே.எப்.றிழா (சவளக்கடை), ஏ.எம்.எப்.சபானா (சாய்ந்தமருது), எம்.யூ.எப்.முப்லிஹா (சாய்ந்தமருது), ஏ.எம்.எப்.றிப்கானா (சவளக்கடை) ஆகியோரே 'தைபிய்யா' எனும் பட்டத்துடன் மௌலவியாக்களாக வெளியேறுகின்றனர்.

இதற்கு முன்னர் கடந்த நான்கு தொகுதி மாணவிகளில் 23 பேர் அடங்கலாக இதுவரை 30 பேர் இக்கல்லூரியில் இருந்து மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

இவர்களுள் 15 பேர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற இக்கல்லூரியில் மௌலவியா பட்டத்திற்கான அல்ஆலிம் இஸ்லாமிய கற்கை நெறி போதிக்கப்படுவதுடன் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கும் இந்த மாணவிகள் தயார்படுத்தப்படு கின்றனர்- என்று அதிபர் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு விரைவில் வருகிறது மின்சாரத்தில் இயங்கும் பஸ்கள்!

## நெடுஞ்சாலைகள் அமைச்சர் தகவல்

இலங்கையில் மின்சார ஓட்டோக்கள் மற்றும் பஸ்களை துரிதமாக அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் இது தொடர்பிலான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

இலங்கையில் பத்து லட்சத்துக்கும் அதிகமான ஓட்டோக்கள் உள்ளன. அந்த ஓட்டோக்களை மின்சாரத்தில் இயங்கும் வகையில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் எரிபொருள் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதுடன், குறைந்த கட்டணத்தில் மக்கள் பயணிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

யு.என்.டி.பி நிறுவனத்தின் மின் இயக்கத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 300 ஓட்டோக்களை மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களாக மாற்றுவதற்கும், அதற்கான முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு யு.என்.டி.பி நிறுவனம் 30 லட்சம் அமெரிக்க டொலர் களை ஒதுக்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக கொழும்பு நகரில் மின்சார பஸ் சேவையை ஆரம்பிக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, பயணிகள் போக்குவரத்து தொடர்பான அனைத்து நிறுவனங்களின் பொறுப்பையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனூடாக, கட்டண நிர்ணயம் மற்றும் அபராதம் விதிக்கும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும்.

மேலும் மின்சாரமாக மாற்றப்படும் ஓட்டோக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும். – எனக் கூறியுள்ளார்.

## யாழில் அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோழி முட்டைகளுக்கான கட்டுப்பாட்டு விலை, வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் முட்டைகளின் விலைகளை கட்டுப்பாட்டு விலைக்குள் விற்பனை செய்யாமல் அதிக விலைக்கு வர்த்தகர்கள் விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில், யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கல்வியங்காடு போன்றபகுதிகளில்உள்ளவர்த்தகநிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, அதிக விலைக்கு முட்டையை விற்பனைசெய்தமூன்றுவர்த்தகநிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

## முட்டையொன்றின் விற்பனை விலையை குறைப்பதற்கு உற்பத்தியாளர் இணக்கம்!

முட்டையொன்றின் விற்பனை விலையை குறைப்பதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சந்தையில் முட்டையின் விலை கட்டம் கட்டமாக குறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோழிகளுக்கான தீவனம் மற்றும் மருந்துப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக கோழிப்பண்ணை உற்பத்தியாளர்களும் அதிக செலவுகளைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடி தொடர்ந்தும் சுற்றி வளைப்புகள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, முட்டைக்கான உற்பத்திச் செலவை விடக் குறைவான விலையில் முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


## வவுனியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இறுதி போட்டி நேற்று நடந்தது

வவுனியா உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றிப்போட்டியின் இறுதி போட்டி நேற்று (திங்கட்கிழமை) பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டு கழகம் மற்றும் ஈகிள் விளையாட்டு கழகங்கள் இறுதி போட்டியில் மோதியிருந்தன.

வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் நாகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவிலிலும் கரையோரத்தை அரித்துக் காவு கொள்ளுகிறது கடல்





(காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் பிரதேசத்திலும் பெரும் கடல் அரிப்பு அனர்த்தம் இடம்பெற்று வருகிறது.

தம்பிலுவில்திருநாவுக்கரசுநாயனார்குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதி மற்றும் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடல் பகுதிகள் இந்த கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றன.

கடந்த ஒரு வார காலமாக இடம் பெற்று வரும் இந்த கடல் அரிப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. அது போல ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டிருக்கிறது. சுமார் 100 அடி பரப்பு கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது .மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. அவர்களது மீன்பிடி வள்ளங்கள் கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.கடலரிப்பை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2022இல் வெளியிடப்பெற்றது.